பொன்னம்மாள் அவர்கள் அந்தப் பயிரைப் பயிரிட வேண்டும் என்று விரும்பினால் வேளாண்மைத் துறை அலுவலகத்திடம் சென்று நான் பயிரிட விரும்புகிறேன் என்று விருப்பத்தை தெரிவித்தால், அதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் இந்தத் துறை செய்து தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 530, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

530—

தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்தல்

*24525—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்யப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை. பாசுமதி அரிசி வாசனை அரிசி ரகத்தில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் ஜெ.ஜெ. 92 என்ற வாசனை ரக நெல்லைப் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்திற்குத் தேவையான பாசுமதி அரிசி இங்கே உற்பத்தி செய்யப்படாமல், வெளி மாநிலங்களிலிருந்துதான் வரவழைக்கப்படுவதாகத் தெரிகிறது. எனவே, இங்கே பயிர் செய்ய விரும்பும் விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசுமதி அரிசி என்பது இன்றைக்கு அரியானா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலே,

அந்தத் தட்பவெப்ப சூழ்நிலைக்கேற்ப அந்தரக நெல் பயிரிடப் படுகிறது. அவை போன்ற, அதற்கு இணையாக அந்த வாசனை ரகம் தரக்கூடிய ஒரு நெல்லைத்தான் 1992ஆம் ஆண்டு முதல் வெளியீடாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் ஜெ.ஜெ. 92 என்ற புதிய நெல்லினை அறிமுகம் செய்து இன் றைக்கு அவை தமிழகத்திலே பயிரிடப்பட்டு வருகின்றன என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.40

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த பாசுமதி அரிசி அரபு நாடுகளில் தினமும் பிரியாணி செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அங்கே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி வாய்ப்பும் இருக்கிறது. இந்த அரிசியை தமிழகத்தில் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், குறிப்பாக அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அந்நியச் செலாவணி கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் குறிப் பிட்ட அந்த அரிசியை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு உத்தேசித்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசுமதி நெல்லை இங்கே பயிரிட முடியாது. அதற்கு இணையாக அதைவிட வயது குறைந்த, அதைவிட மணம் மிக்க ரகத்திலே நீளமாக இருக்கக் கூடிய புதிய ரகமான ஜெ.ஜெ. 92-ஐ இன்றைக்கு தமிழக விவ சாயிகள் பயிரிட்டுக் கொண்டு வருகிறார்கள். இந்த அரிசி இன்றைக்கு மிகப் பிரபலமாக புகழும் சிறப்புத் தன்மையும் கொண்டதாக இன்றைக்கு இந்திய உழவர் பெருமக்களால் விரும்பப்படுகிறது. குறிப்பாகச் சொல்கிறேன், இன்று கூட ஆந்திர மாநிலத்தில் இருக்கக் கூடிய விவசாயிகள் இந்த விதை நெல் எங்களுக்கு வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அந்த புகழ் மிக்க நெல்லின் விதைகள் ஆந்திராவைத் தாண்டி வடக்கு மாநிலம் நோக்கி போய்க் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நெல்லிலிருந்து கிடைக்கக் கூடிய அரிசியை மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஜி. ஆர். மாலா.

1994 மே 5]

டாக்டர் ஜி, ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த ஜெஜெ 92 ரகம் இப்போது வடக்கு நோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள்? இது எத்தனை ஏக்கர் நிலப்பரப்பில் உற்பத்தி செய்யப்படுகிறது. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அளவில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறதா ? மொரிஷ்யஸ் நாட்டில் இது போல பாசுமதி அரிசியையும் சீரகச்சம்பா போன்ற உயர்ந்த ரக அரிசிகளையும் பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்கிறார்கள். நமது தமிழ்நாட்டிலிருந்து அங்கு ஏற்றுமதி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்; மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சேரன்செங்குட்டுவன் காலத்திலே தான் இமயத்திலே தமிழ்நாட்டின் வெற்றிக் கொடி பறந்தது. அதனைப்போல இன்றைக்கு புதிய ரகமான நெல்லுக்கு புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே இமயம் வரை அந்தப் புகழ்க் கொடி பறக்கும் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி) அதனைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மொரிஷியஸ் தீவில் நெருங்கிய உறவினர்கள் உள்ளார்கள். அவர் தமிழகத்திலிருந்து போகின்றபோது இது போன்ற அரிசிகளை அங்கே எடுத்துச் சென்று அங்கே வாழக் கூடிய தமிழர்கள், இந்திய உணவின்மீது விருப்பம் கொண்டவர்களுக்கெல்லாம் கொடுத்து இதனுடைய பெருமையை விளக்க வேண்டும். அதன் வாயிலாக ஏற்றுமதியை ஊக்குவிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனி சாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜெ.ஜெ. 92 ரக நெல் தமிழ் நாட்டிலிருந்து வடக்கு நோக்கிப்போகிறது என்றுசொன்னார்கள். நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய விவசாயிகள் அதை ஆர்வத்தோடு உற்பத்திச் செய்கிறார்கள். இங்கே உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் யாரும் அதைச் சாப்பிடு வதற்கு முடிவதில்லை. காரணம் என்னவென்று சொன்னால் அதை அரைப்பதற்கு மில்லே கிடையாது என்றுசொல்கிறார்கள்.

எல்லாம் நொறுங்கி விடுகிறது. ஆகவே, அதற்கான அரைக்கின்ற ப்ளாஸ்டிக் மில்லை உருவாக்குவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கென்று தனி மில் தேவையில்லை. தஞ்சையிலே ஒரு மில் இருக்கிறது. நாகப்பட்டினத்தில் மில் இருக்கிறது. என்னுடைய வேளாண்மை மானிய கோரிக்கை வந்தபோது மாண்புமிகு உறுப்பினருக்கே பதில் சொல்லியிருக்கிறேன். எனவே, இங்கே அரிசியாக அது தக்க முறையிலே அதனுடைய தன்மை கெடாத அளவுக்கு இங்கே அரைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நெல்லை விளைவிக்கக்கூடிய உழவர்கள் அதிக வருவாயைப் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திலேதான் இது போன்ற புதிய வாசனை நெல்லை இன்றைக்கு அறிமுகம் செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 531, திரு. பி.வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை. வினா எண் 532, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

532—

செங்கல்பட்டு ஓரியண்ட் கெமிக்கல் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர் பாலாற்றில் கலப்பதைத் தடுத்தல்.

*22310— திரு. செ.து. வரதராஜன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு ஓரியண்ட் கெமிக்கல் சாராயத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கெமிக்கல் கழிவு நீர் செங்கல்பட்டு முனிசிபல் குடிநீருடன் கலந்து பொது மக்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்தக் கழிவு நீர் பாலாற்றில் கலக்காமலும், விவசாயத்திற்குப் பயன்படும் தண்ணீரில் கலக்காமலும் இருக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,